Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் :பெப்ரவரி 04

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திரம், சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப்பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **வரலாற்று ரீதியான கட்டட நிர்மாணங்கள் சார்ந்த கலையம்சங்களை அறிவார்.**

**செயற்பாடு** : **கைப்பிடி (கொரவக்கல்)**

**ஒப்படை** : **பின்வரும் வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

## வாசிப்புப் படிவம்
### கைப்பிடி (கொரவக்கல்)

* வணக்கஸ்தலமொன்றுக்குள் அல்லது கட்டடம் ஒன்றுக்குள் நுழையும் படிவரிசையின் இரு புறத்திலும் கைப்பிடி போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்ட பாரிய இரு கற் சுவர்கள் கைப்பிடியாகும்.
* கைப்பிடியானது மகரவாயில் இருந்து வெளிவரும் தும்பிக்கை, நீரலை, தீச்சுடர் அமைப்புகளைக் கொண்டன.
* மகரவாயில் இருந்து வெளிவரும் சந்தத்துடனான நீரலையில் (தும்பிக்கை, தீச்சுடர்) நுணுக்கமான முறையில் செதுக்கல்கள் காணப்படுவதால் அது அருமையான நிர்மாணிப்பாகிறது.
* சிம்ம உருவங்கள், கஜசிங்க உருவங்கள், பெண் உருவங்கள் என்பன செதுக்கல்களில் காணப்படுகின்றன.
* அனுராதபுரம், பொலனறுவை காலத்தில் கருங்கல்லினாலும் கண்டி, கம்பளை காலத்தில் செங்கல், சாந்துக்கலவையினாலும் கைப்பிடி நிர்மாணிக்கப்பட்டது.
* அனுராதபுரம், பொலனறுவை காலங்களில் மகர உருவம் கைப்பிடியில் காணப்பட்டது. கண்டி கம்பளை காலங்களில் கஜசிங்க உருவ எண்ணக்கருவிற்கு மாற்றமடைந்தது.
* படிவரிசையின் படிக்கட்டுகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு கைப்பிடியின் நீளம், அகலம் என்பன தீர்மானிக்கப்பட்டன.

**பல காலங்களுக்குரிய உயர் கலைப்பண்புகளைக் கொண்ட கைப்பிடிகள்**

**அனுராதபுக் காலம்**

* இரத்தின பிரசாதயவின் கைப்பிடி

**பொலனறுவைக் காலம்**

* பொலனறுவை வட்டதாகேயின் கைப்பிடி

**கம்பளைக்காலம்**

* கடலாதெனிய விகாரையின் கைப்பிடி


இரத்தின பிரசாதயவின் கைப்பிடி

இரத்தின பிரசாதயவின் கைப்பிடி


பொலனறுவை வட்டதாகேயின் கைப்பிடி

பொலனறுவை வட்டதாகேயின் கைப்பிடி



கடலாதெனிய விகாரையின் கைப்பிடி

**படிவரிசை**

* கீழ் தளத்தில் இருந்து மேற்றளத்துக்கு செல்ல இது அமைக்கப்பட்டுள்ளது.
* சந்திரவட்டக்கல், காவற்கல், கைப்பிடி எனும் அங்கங்களை இணைக்கும் வகையில் இது அமைந்துள்ளது.
* ஆரம்ப காலத்தில் இதில் செதுக்கல்கள் காணப்படவில்லை. பின்னர் இது விசித்திரமான அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டன.
* படிவரிசையில் ஏறுவதற்காக சந்திரவட்டக்கல்லை அடையும் ஒருவருக்கு படிக்கட்டின் நேராக அமையும் பரப்புகள் நன்றாகத் தோற்றமளிக்கும். எனவே இப்பரப்புகளை செதுக்கல்களுக்கு உபயோகித்தனர்.
* குள்ளர்களின் உருவங்கள், வஜிர உருவங்கள், தாமரை இதழ்கள், கொடிவலை என்பவற்றால் படிவரிசை அலங்கரிக்கப்பட்டது.
* அனுராதபுர இராணி (பிசோ) மாளிகை, மகாசென் அரண்மனை, படிவரிசை வஜ்ஜிர, குள்ள உருவங்களால் அலரிக்கப்பட்டன.
* பொலனறுவை வட்டதாகேயின் படிவரிசை அண்மித்தும் வரிசையாகவும் உள்ள குள்ள உருவங்கள் பலவற்றால் அலங்கரிக்கப் பட்டுள்ளன.
* கண்டி விஷ்னு ஆலயப் படிவரிசை கொடிவலை ப' அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
* இலங்கையில் காணப்படும் சிறந்த செதுக்கல்களைக் கொண்ட படிவரிசைகள் கருங்கல்லை ஊடகமாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



அநூராதபுர இராணிமாளிகையின் படிவரிசை



பொலநறுவை வட்டதாகேயின் படிவரிசை



கண்டி விஷ்ணு ஆலயத்தின் படிவரிசை

**வினாக்கள்**

**1.கொரவக்கல் என்றால் என்ன என்பதை விளக்குக.**

**2.படிவரிசையின் கலையம்சங்களை சுருக்கமாக எழுதுக.**

**3.இலங்கையில் காணப்படும் சிறப்புவாய்ந்த கொரவக்கல் மற்றும் படிவரிசகளை பட விளக்கங்களுடன் எழுதுக.**

**4.வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்து முக்கிய குறிப்புகளை உமது பயிற்சிக் கொப்பியில் எழுதிக்கொள்க.**